# அனர்த்தங்களின் பின்னர் இயங்குவதை விட முன்கூட்டி தயாராவதே பாதுகாப்பானது

**- கலாநிதி அஸ்லம் சஜா**

> அனர்த்தங்களுக்கு முன்னதாக அனர்த்த தயார் நிலை செயற்பாடுகளுக்கு செலவழிக்கப்படும் ஒரு ரூபாய் மூலம் அனர்த்தங்களுக்கு பின்னரான இழப்புக்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு தேவையான 7 தொடக்கம் 13 ரூபாய்களை சேமிக்க முடியும்.



*கலாநிதி அஸ்லம் சஜா தற்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றுகிறார். 2004 சுனாமியின் பின்னர் பல தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவப் பணிகளில் ஈடுபட்ட அனுபவத்தைக் கொண்டவர். சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு சரியாக 20 ஆண்டுகள் பூர்த்தியாகும் இன்றைய நாளில் அனர்த்த பாதுகாப்பு தொடர்பில், கலாநிதி அஸ்லம் சஜா, 'விடிவெள்ளி'க்கு வழங்கிய நேர்காணலை இங்கு தருகிறோம்.*

**Q: உலகின் பல பாகங்களிலுமுள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையை அதிக அனர்த்த பாதிப்புக்குள்ளாகக்கூடிய நாடாக கணிப்பிடப்பட முடியுமா?**

இலங்கையின் மக்கள் தொகையில் 17 வீதமானவர்கள் அனர்த்தங்களினால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வாழ்கின்ற அதேநேரம், 70 வீதமான மக்கள் அனர்த்தங்களினால் பாதிப்புக்கள் அதிகரித்து வரக்கூடிய 'ஹாட்ஸ்பாட்' (Disaster hotspots) நிலைமைகளில் வாழ்கின்றனர் என சமீபத்திய உலக வங்கி அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. நிலநடுக்கம் மற்றும் நிலப்பகுதிகளில் இருந்து வெகு தொலைவிலுள்ள நாடென இலங்கை நம்பப்பட்டாலும் முழு இலங்கைத் தீவும் இந்தியப் பெருங்கடல் சுனாமியால் மற்றும் பெரிய அளவிலான வெப்ப மண்டல சூறாவளிகளால் அச்சுறுத்தப்படக்கூடியதாக காணப்படுகின்றன. அவ்வாறான சுனாமி அனர்த்தம் மீண்டும் ஏற்படுமானால் 2004 ஆம் ஆண்டைப்போல் ஒரு பேரனர்த்தத்தையே சந்திக்க நேரிடும். ஆனால், இவ்வாறான மிக அரிதாக நிகழக்கூடிய பாரிய தாக்கத்தை விளைவிக்கக்கூடிய சுனாமி அனர்த்தங்களை விட நாளாந்த வாழ்வில் வெள்ளங்கள், வறட்சி, நிலச்சரிவுகள் மற்றும் சூறாவளிகள் வருடந்தோறும் மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இலங்கைத் தீவின் எந்த ஒரு நிலமும் இந்த மிகச்சிறிய அளவிலான காலநிலை மாற்றத்திலிருந்தும் அனர்த்த நிலைமையிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதாகத் தோன்றவில்லை.

**Q: மிக அண்மித்த காலப்பகுதியில் ஏற்பட்ட அனர்த்தங்கள், அதற்கு முந்திய காலங்களைவிட பாரிய பொருளாதார இழப்பினை ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறதே. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

கடந்த பல தசாப்தங்களாக உலகம் முழுவதும் இடம்பெற்ற பேரழிவு நிகழ்வுகள் பல சமூகங்களை அழித்தன. உலகளாவிய ரீதியில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான 20 வருட காலப்பகுதியில் 6,681 காலநிலை தொடர்பான அனர்த்தங்கள் இடம் பெற்றுள்ளன. இது 2000–2019 காலப்பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். இவ்வனர்த்தங்களில் மிக அதிகமான நிகழ்வுகள் வெள்ளம் மற்றும் சூறாவளியுடன் தொடர்புடையவையாகும். 2000 – 2020 காலப்பகுதியில் அனர்த்தங்களினால் ஏற்பட்ட மொத்த பொருளாதார இழப்பு 3 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளிலும் இவ்வனர்த்தங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு அவற்றினால் ஏற்படப்போகும் பொருளாதார இழப்புக்களும் பன்மடங்கு அதிகரித்துச்செல்லும். இலங்கையில் கூட ஒரு வருடத்தினுள் (2024 ஆம் ஆண்டில் மட்டும்) ஒரே பிரதேசம் இரு வெள்ள அனர்த்தங்களை எதிர்கொண்டது. ஒரே வருடத்தினுள் மீண்டும் ஒரு வரட்சிக்காலம் தோன்றும் போது இதனால் ஏற்படப்போகும் பொருளாதார பாதிப்பு பன்மடங்கு அதிகரிக்கும்.

**Q: எதிர்காலத்தில் இலங்கை போன்ற நாடுகளில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

பொதுவாக உலகின் பல்வேறு நாடுகள் பிரதேசங்களில் ஏற்படும் அனர்த்தங்கள் பல்வேறு வகையானவை. இவை தற்போது 'பல்வேறு காரணிகள் இணைந்த சிக்கலான நெருக்கடிகள்' (Multiple complex crisis) என வரையறுக்கப்படுகின்றன. இவற்றில் காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான அனர்த்தங்களுடன் சமூக பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான நெருக்கடிகளும் சுகாதார நெருக்கடிகளும் இணைந்து எதிர்கால அனர்த்த நிலைமைகளை மிகவும் சிக்கலான அனர்த்த நிலைகளாக மாற்றியமைத்திருக்கின்றது.

1957ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய வெள்ளம், 1978ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய சூறாவளி, 2004ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய சுனாமி, 2020ம் ஆண்டு ஏற்பட்ட கொரோனா பெரும்தொற்று நோய், 2022ம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் பல்வேறு காலங்களில் ஏற்பட்ட வரட்சி என இலங்கையின் அனர்த்த நெருக்கடி சூழல் மிகவும் விரிந்தது. எதிர்வரும் காலங்களில் காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான அனர்த்தங்கள் பாரிய சமூக பொருளாதார அரசியல் நெருக்கடிகளை தோற்றுவிக்கக்கூடிய வகையிலே ஏற்படும் சந்தர்ப்பங்களே அதிகமாக காணப்படுகின்றன.

**Q: இலங்கையில் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட அனர்த்தங்கள் பற்றியும் அவற்றினால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்புக்கள் பற்றியும் குறிப்பிட முடியுமா?**

இலங்கையின் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் பிரிவின் தகவல்களின் படி 2024ல் மாத்திரம் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் ஐந்து தடவைகள் வெள்ளம் மற்றும் மண்சரிவு நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. 2024 நவம்பர் – டிசம்பர் காலப்பகுதியில் 130000 குடும்பங்களும் ஒக்டோபர் காலப்பகுதியில் 6000 குடும்பங்களும் ஆகஸ்ட் – செப்டம்பர் காலப்பகுதியில் 2000 குடும்பங்களும் மே – ஜூன் காலப்பகுதியில் 65000 குடும்பங்களும் ஜனவரி மாதத்தில் 34000 குடும்பங்களும் பாதிப்படைந்திருந்தன.

கடந்த 20 ஆண்டுகளில் பேரழிவுகள் காரணமாக அதிகப்படியான தாக்கம் ஆசிய கண்டத்திலேயே ஏற்பட்டுள்ளது. உலகிலே மொத்தமாக பாதிக்கப்பட்ட மக்களில் 85 வீதம் ஆசிய கண்டத்தில் உள்ளனர். அதேபோல் உலகிலே ஏற்பட்ட மொத்த இழப்புக்களில் 78 வீத பொருளாதார பாதிப்பையும் பேரழிவு நிகழ்வுகளில் 62 வீதத்தையும் மற்றும் 69 வீத இறப்பு எண்ணிக்கையையும் ஆசிய கண்டமே பதிவு செய்துள்ளது.

2002 ஆம் ஆண்டிலிருந்து அனர்த்தங்களினால் ஏற்பட்ட தரவுகளின் அடிப்படையில் பார்க்கும்போது மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. அதேவேளை வரட்சியினால் குருநாகல், ஹம்பாந்தோட்டை, புத்தளம், அநுராதபுர மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தன. இதே போக்கு எதிர்காலத்திலும் காணப்படும். காலநிலை மாற்றத்தினால் கடந்த காலங்களைவிட எதிர்வரும் வருடங்களில் குறுகிய காலப் பகுதியில் அதிக வரட்சியும் மற்றுமோர் குறுகிய காலப்பகுதியில் – அதாவது பருவப்பெயர்ச்சி காலப்பகுதியில் அதிக மழைவீழ்ச்சியும் ஒரே ஆண்டில் ஒரே பிரதேசத்தில் ஏற்படுகின்றன.

இவை தவிர சூறாவளி, நிலச்சரிவு, அதிக வெப்ப அலைகள் என்பனவும் ஒவ்வொருஆண்டும்ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இலங்கை தொடர்ந்தும் புதிய பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை அறிமுகப்படுத்தி வரும் இந்நிலையில் குறிப்பாக நகர்ப்புறங்களின் பொருளாதார, சமூக செயற்பாடுகள் அதிகரிப்பதனால் அனர்த்த ஆபத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய செயற்பாடுகளில் பொதுமக்களும் அரச தனியார் நிறுவனங்களும் ஈடுபடுவதனால் தொடர்ந்தும் கடந்த காலங்களைவிட எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் அதிக பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும்.

**Q: அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதிலும் அபிவிருத்தி விடயங்களில் அனர்த்த ஆபத்தை குறைக்கக்கூடிய விடயங்களை உள்வாங்குவதிலும் அரச மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் வகிபாகம் எவ்வாறு காணப்படுகிறது?**

இந்த தீவிரமான காலநிலை நிகழ்வுகளை எதிர்த்து பிராந்திய மற்றும் உலகளாவிய அணுகுமுறைகள் மற்றும் பல திட்டங்கள் பிரேரிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் தேசிய ரீதியில் இக்கொள்கைகளுக்கமைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கண்காணிப்பில் "பாதுகாப்பான இலங்கை" எனும் தொனிப்பொருளில் இலங்கை தேசத்திற்கான அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2022–2030 மேற்கொள்ளப்பட்டிருந்தது. சர்வதேச அனர்த்த ஆபத்து குறைப்பிற்கான 2015–2030 வரையான மூலோபாயங்களை வலியுறுத்தும் அதேவேளை, அதிகரித்து வரும் பேரழிவு மற்றும் காலநிலை அபாயங்கள் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருவதால் உள்ளூர் நடவடிக்கைகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

அனர்த்த ஆபத்து உணர்திறனுள்ள அபிவிருத்தி அணுகுமுறை, அனர்த்தங்களை எதிர்கொள்ளும் சமூக வலுதிறன் மற்றும் நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளை உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் கொள்கை வகுப்பாளர்களும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்னிறுத்தி செயற்படவேண்டும். அனர்த்த ஆபத்து குறைப்பு நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்களினதும் உறுப்பினர்களினதும் பங்களிப்பு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. குறிப்பாக நகர, மாநகர சபைகள் நாம் எதிர்நோக்கியிருக்கும் அனர்த்த அபாய அச்சுறுத்தல்களுக்கு முன்கூட்டியே தேவையான ஆதாரங்களையும் வளங்களையும் திரட்டி மக்களை தயார்படுத்தும் முயற்சிகள் மிகவும் குறைவு. இவற்றிற்கான சட்ட மற்றும் ஆட்சி ஏற்பாடுகள் மூலம் உள்ளூராட்சி சபைகள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

நாடெங்கிலுமுள்ள நகர மற்றும் மாநகர சபைகள் கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பெரிய நெருக்கடிக்கு இட்டுச்செல்லும் நாளாந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் போராட்டத்தில் தமது காலத்தையும் வளத்தையும் செலவழிப்பதால் அனர்த்த அபாய தயார்படுத்தல் செயற்பாடுகளில் தமது கவனத்தை குவிப்பதில் பாரிய சிரமங்களையும் வளப்பற்றாக்குறைகளையும் கொண்டுள்ளன.

எல்லாத் துறைகளிலும் எங்கள் வழக்கமான பணியின் ஒரு பகுதியாக அனர்த்த ஆபத்து குறைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து தனியார் மற்றும் சிவில் சமூக அமைப்பு முறைகளை ஒன்றாக ஒருங்கிணைக்க ஒரு பொறிமுறையை உருவாக்கி அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் பயிற்சியளிக்கப்படவேண்டும்.

**Q: உலகளாவிய அனர்த்த ஆபத்து குறைப்பு கொள்கை தொடர்பான முக்கிய விடயங்களை கூற முடியுமா?**

அதிகரித்துவரும் சனத்தொகை மற்றும் மக்களினது நகர வாழ்வை நோக்கிய இடம்பெயர்வும் வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மையின் தொடர்ச்சியான அதிகரிப்பினாலும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு மிகவும் பாதிக்கப்படும் பகுதிகளில் தெற்காசிய நாடுகளே முன்னணி வகிக்கின்றன. 2015–2030 உலக அனர்த்த குறைப்பு கட்டமைப்பு ஏழு உலக இலக்குகளையும் மற்றும் நான்கு முன்னுரிமை நடவடிக்கைகளையும் கொண்டுள்ளன. நான்கு முன்னுரிமை நடவடிக்கைகளில் முதலாவது அனர்த்த ஆபத்தை விளங்கிக்கொள்ளல், இரண்டாவது அனர்த்த ஆபத்து குறைப்பு நடவடிக்கைகளுக்கான நிர்வாகத்தை வலுப்படுத்தல், மூன்றாவது அனர்த்த அபாயத்தை குறைப்பதில் முதலீடு செய்தல், நாலாவதாக அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான தயார்நிலைகளை மேம்படுத்துதல் என்பன உள்ளடங்கும்.

இலங்கையை பொறுத்தளவில் மாவட்ட ரீதியிலும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு அரச கட்டமைப்பினுள் சரியான முறையில் ஒருங்கிணைக்கப்படவில்லை. அனர்த்தங்களின் போது மக்களை பாதுகாக்கும் பொறுப்பு அந்நாட்டின் அரசாங்கத்திற்குரியது. எனினும் பிரதேச ரீதியான அரச கட்டமைப்புக்கள் சரியான ஒருங்கிணைப்பினையும் வளங்களையும் கொண்டதாக காணப்படவில்லை. மக்களும் சமூக தொண்டர் அமைப்புக்களும் இவ்வெற்றிடத்தினை நிவர்த்தி செய்கின்றன. எனினும் இவை சரியான முறையில் ஒருங்கிணைக்கப்படாததன் காரணமாக அனர்த்தங்களின் பின்னரான செயற்பாடுகள் வினைத்திறனற்றதாக மாறுகின்றன. இதனால் பல உயிரழப்புக்கள் ஏற்படுவதுடன் மக்களுக்கான உதவிகளும் உரிய நேரத்தில் சென்றடைவதில்லை.

தனியார் நிறுவனங்கள் சிவில் சமூக அமைப்புக்கள் வர்த்தகர்கள் இணைந்து அனர்த்த முகாமைத்துவ நிதியம் ஒன்றினை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆரம்பிக்க வேண்டும். இந்நிதியம் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழுவின் மேற்பார்வையில் பிரதேச செயலாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்/செயலாளர் ஆகியோரின் அனுமதியுடன் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு ஏற்படுத்த வேண்டும்.

**Q: எதிர்காலங்களில் இலங்கைத்தீவு எதிர்கொள்ளக்கூடிய அனர்த்த ஆபத்து நிலையினைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

வெள்ள அபாயங்கள், கரையோரப் பகுதிகள், வறண்ட நிலங்கள் மற்றும் இதர உயர் இடர் பகுதிகளை நாங்கள் ஆக்கிரமித்துள்ளோம். அவை இயற்கை சமநிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி அனர்த்த பாதிப்புக்களை அதிகரிக்கச்செய்கின்றது. இலங்கையில் எமது செய்தி ஊடகங்களில் தினசரி செய்தித் தலைப்புகளைப் பார்க்கும்போது இயற்கை அனர்த்தங்கள் தவிர்ந்த ஏனைய அனர்த்தங்களையும் நாம் மறக்க முடியாது. – தினசரி ஒவ்வொரு மணி நேரத்திலும் வீதி விபத்துக்கள், யானையினால் தாக்கப்படல் மற்றும் சிறுநீரக நோய்கள் டெங்கு மற்றும் சூழல் மாசடைதல் காரணமாக ஏற்படும் இறப்பு போன்றவற்றை குறிப்பிட முடியும். 2009 இல் முடிவடைந்த மூன்று தசாப்த கால யுத்தம் காரணமாக ஏற்பட்ட அழிவுகளை விடவும் மேற்குறிப்பிட்ட அனர்த்தங்களால் ஏற்படும் அழிவுகள் அதிகரித்த வண்ணமுள்ளன.

**Q: டிசம்பர் 26 இலங்கையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நாளை ஞாபகப்படுத்தும் அதேவேளை, இலங்கை அரசு தேசிய பாதுகாப்பு தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. இதில் பொதுமக்களுக்கு ஞாபகமூட்டப்பட வேண்டிய விடயம் என்ன?**

தேசிய பாதுகாப்பு தினமானது டிசம்பர் 26 ஆம் திகதி இலங்கை உட்பட 12 நாடுகளில் 200,000 க்கும் அதிகமான உயிர்களைக் காவுகொண்ட 2004 சுனாமி பேரழிவை நினைவுபடுத்துகிறது. அதிகரித்துவரும் பேரழிவு மற்றும் காலநிலை அபாயங்கள் ஆகியவற்றிற்குத் தயார் செய்ய இந்த நாட்களை நினைவுபடுத்துவதன் மூலம் எதிர்கால அனர்த்த பாதிப்புக்களிலிருந்து எம்மை தயார்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக காணப்படுகின்றது. நாங்கள் அதிகம் பேசலாம், எழுதலாம், விவாதம் செய்யலாம். ஆனாலும் இறுதியாக செயற்பாடே விளைவுகளை தரும். ஆகக் குறைந்தது நமது சமூக சுற்றுச்சூழலில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதற்கு முன்னர் அச்செயற்பாடு அனர்த்த ஆபத்தை அதிகரிக்குமா என்பதை சிந்தித்து செயற்படவேண்டும்.

அனர்த்தம் மற்றும் காலநிலை அபாய உணர்வோடு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வது அதிகாரிகளுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் மிக முக்கியமாகும். இவ்வாறு மக்களும் அரச அதிகாரிகளும் எதிர்கால அனர்த்த ஆபத்தினை உணர்ந்து தமது அபிவிருத்தி செயற்பாடுகளைச் செய்யும்போது எமது சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கின்றன. எங்கள் குழந்தைகள் மற்றும் அடுத்த தலைமுறை இளைஞர்களின் வருங்காலத்திற்காக வாழும் நகரங்களையும் கிராமங்களையும் நாம் இன்னும் காணவில்லை.

மாற்றத்திற்கான கொள்கைகளுடன் ஆட்சி பீடமேறியுள்ள இந்த அரசு அனர்த்த நிலமைகளில் மிகவும் விரைவாக இயங்கக்கூடிய வினைத்திறனான ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அரச நிர்வாக கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு அனர்த்த முகாமைத்துவ குழுக்களின் செயற்பாடுகள் மீளமைக்கப்பட வேண்டும். குறிப்பாக அனர்த்த பாதிப்புக்களை குறைப்பதற்கான அதிக வளங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் துறை ரீதியான அரச திணைக்களங்களின் கீழ் காணப்படுவதால் பிரதேச அனர்த்த முகாமைத்துவ குழுக்களில் உள்ளூராட்சி மன்றங்களினதும் துறை ரீதியான அரச நிறுவனங்களினதும் பங்களிப்பு மிகவும் அவசியாகிறது.

அனர்த்தங்களுக்கான தயார்நிலை செயற்பாடுகளை எங்கள் வீடுகளிலிருந்தும், எங்கள் குழந்தைகளிடமிருந்தும் எங்கள் பாடசாலைகள், அலுவலகங்களிலிருந்தும் சிறிய செயற்பாடாக ஆரம்பிக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். எமது செயற்பாடுகளில் நாம் தாமதிக்கும்போது இன்னும் பல அழிவுகளை சந்திக்கவேண்டியேற்படும். அனர்த்தங்களின் பின்னர் கைவிரிப்பதை விட அவை ஏற்பட முன்னர் சற்று சிந்தித்து சிறு செயல்பாடுகளிலாவது ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும்.

**Q: நமது சமூகத்தில் அனர்த்தம் ஒன்று ஏற்பட்ட பின்னர் சமைத்த உணவு மற்றும் நிவாரணங்கள் வழங்குவதிலேயே சமூக நிறுவனங்கள் கவனம் செலுத்துகின்றன. மாறாக அனர்த்தத்திற்கு முன்னரே தயாராதல், அதற்கு பதிலளித்தல், அனர்த்தத்தை வினைத்திறனாக முகாமை செய்தல் போன்றவற்றில் நாம் கவனம் செலுத்துவது எந்தளவு தூரம் முக்கியம் எனக் கருதுகிறீர்கள்?**

பொதுவாக அனர்த்தங்களுக்கு முன்னதாக அனர்த்த தயார் நிலை செயற்பாடுகளுக்கு செலவழிக்கப்படும் ஒரு ரூபாய் மூலம் அனர்த்தங்களுக்கு பின்னரான இழப்புக்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு தேவையான 7 தொடக்கம் 13 ரூபாய்களை சேமிக்க முடியும்.

அனர்த்தங்களுக்கு தயார்படுத்துவதன் மூலம் ஒரு மனித உயிரைக் கூட எம்மால் காப்பாற்ற முடியுமானால் அந்த முயற்சிகளுக்கு அனர்த்தமொன்று ஏற்படும் போது நாம் கொடுக்கும் சிறு முயற்சிகளைக் கூட அனர்த்தங்கள் ஏற்பட முன்னதாக வழங்க முன்வருவதில்லை.

காலங்காலமாக அனர்த்தங்களின் போது நாம் பெற்றுள்ள படிப்பினைகளை உரிய முறையாக அடையாளப்படுத்தி எதிர்கால அனர்த்த தயார்படுத்தல் செயற்பாடுகளை திட்டமிடுதல் மிக முக்கியமானதாகும்.

இதில் குறிப்பாக அரச நிறுவனங்கள் மட்டுமல்லாது சமூக மட்ட அமைப்புக்களும் சமய நிறுவனங்களும் கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமாகின்றது.


உங்கள் அபிமான விடிவெள்ளி வார இதழில்
2025 ஜனவரி முதல்



கலாநிதி
எம்.சி.ரஸ்மின்
எழுதும்

“இணையப் பாவனைக்கு அடிமையாகும் இளம் சமூகம்”



பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், உலமாக்கள் என அனைத்து தரப்பினரும் அவசியம் வாசிக்க வேண்டிய தொடர்!